# இயல் - ஆறு

# கந்தபுராணத்தில் இடம்பெறும் ஆள் பெயர்கள்

## 6.0 முகவுரை

கச்சியப்ப முனிவர் கந்த புராணத்தில் குறிப்பிட்டிருக்கும் பெயர்கள் எண்ணற்றவை. கதையில் பங்கு வகிக்கும் முக்கியமான பாத்திரங்களுக்கு மட்டுமன்றி, ஏனைய எல்லா கதாபாத்திரங்களுக்கும், குறிப்பாக படைத்தலைவர்கள், போர் வீரர்கள் ஆகியோருக்கும் பெயர்கள் தந்து, கதைக்கு உயிரூட்டியிருக்கின்றார். அப்பெயர்களைத் திரட்டி, அவை வரும் இடங்களையும் குறிப்பிடுவதே இந்த இயலின் நோக்கமாகும்.

## 6. 1 உற்பத்திகாண்டத்தில் இடம் பெறும் பெயர்கள்

கவுரி என்று பார்வதியைக் குறிப்பிடுவது,

"காதலாகுங் கவுரி பெயர் பாங்குற"

உமையவள் என்ற பெயரால் பார்வதியைக் குறிப்பிடுவது,

"மெல்லியல் உமையவள் வெள்ளி வெற்பொரீஇ"

பார்வதிக்கு ஆசிரியர் பல பெயர்கள் கொடுத்துள்ளார்.

அவையாவன,

| | |
|---|---|
| 'பார்ப்பதி' | - "பத்திமை படு பாலாற் பார்ப்பதி தொழலோடும்" |
| பாரதி | - "பங்கய மான்கை பற்றிப் பாரதி பரவ வந்தாள் |
| அம்பிகை | - அம்பிகை யுவகை யோடன்பு கொண்டெழீஇ" |
| வேணி | - "வள்ளல் வேணியின் மாமதி ஈண்டியே" |

சிவபிரானையும் பல பெயர்களில் அழைக்கின்றார் ஆசிரியர்.

ஆரணன் - "ஆரணன் தனது மைந்தர்க்கு அரும்பெறல்
ஞான போதம்"

ஈசன் - "ஆர் வருந்திறத்தால் ஈசன் தவத்தருக்
குணர்வு காட்டி"

ஆதிநாயகன் - "ஆதிநாயகன் அவ்வுழி வந்து"

வேதநாயகன் - "வேதநாயகன் மெய்த்தவர்க் கோர்கணம்"

சடையண்ணல் - "ஆறுற்றிடு செஞ்சடையண்ணனுடன்

காளகண்டன் - "காளகண்டன் முன்பு சென்று கூடிய வெய்ய
களைக்குடும்"

பித்தன் - "நெடிது மூத்தலின் மயங்கினை பித்தனோ"

பிறைமுடிப்பிரான் - "பின்னமும் இசைத்தனன் பிறை முடிப்பிரான்

சங்கரர் - சங்கரர்க்குத் தகாதி தென்பார் சிலர் "

இவ்வாறு சிவபெருமானை பல பெயர்களால் குறிப்பிடுகின்றார். மேனை என்று பார்வதியின் தாயைக் குறிப்பிடுவது.

"மங்கல மேனையென்னும் மனைவிகைக் கொடுத்தான் மாதோ"

நந்தி - "சென்றிடு நந்தி புத்தேள் சிறப்புடை வதன நோக்கி" சனக முனிவர்களாகிய சனகன், சனந்தனன், சனாதனன், சனர் குமாரன்.

"புனைந்தனன் சரிகனென்றுரைக்கும் புங்கவன்
சனந்தனன் சனாதனன் சனற்குமாரனாம்
இனந்தரு முனிவரை இனிது நோக்கினன்"

விசயை( பார்வதியின் தோழி)

"மெய்த்துணையென்று நின்ற விசயை"

சிவகணங்களாக உருத்திரன், கூர்மாண்டன், வீரபுத்திரவுருத்தினன், குண்டோதரன், கண்டகன்னன், பினாகி, பானுகம்பன், சங்குகன்னன் ஆகியோரைக் கூறுகின்றார். அவை முறையே பாடல்களில் இடம்பெற்றவாறு,

"காலத்தீப்பெயர் உருத்திரன்
மழுவலத்தினாய கூர்மாண்டன்
வீரபத்திரவுருத்தினன் வந்தனன் விரைவில்
வீறு கொண்ட குண்டோதரன் போந்தனன் "
கண்ட கன்னனும், பினாகியும் வந்தனர் கயிலை "
"பானுகம்பன் தலைவன் ஒண்கயிலையிற் படர்ந்தான்"
" சங்கு கன்னன் வந்துதித்தனன் தடவரை தன்னில் "
"காளகண்டனுந் தண்டியும் நீலனும் கரனும்
வாள் வலம்பெறு விச்சுவமாலியும் மற்றும் "

அகத்தியரைக் கும்பமுனிவன் என்று குறிப்பிடுகின்றார். நவவீரர்களின் பெயர்களும் தருகின்றார். அவர்களின் பெயர்கள் வருமாறு,

வீரவாகு, வீரகேசரி, வீர மகேந்திரன், வீர மகேச்சுவரன், வீர புரந்தரன், வீர ராக்கதன், வீரமார்த்தாண்டன், வீராந்தகன், வீரதீரன் ஆகியோர், அப்பெயர்கள் இடம் பெறும் பாடல் வரிகள் தரப்பட்டுள்ளன.

"வீரவாகு வந்துதித்தனன் உலகெலாம் வியப்ப "
"வல்லிபால் தோன்றினன் வீரகேசரியே"
"தக்க வீரமகேந்திரன் வந்துதித்தான் "
" மாதவத்தினால் வீரமகேச்சுவரன் வந்தான்"

' மானவீரபுரந்தரன் என்பவன வந்தான்"

' வீரராக்கதன் வந்தனன் வயிரமேல் லியல்பால்"

" மரகதத்திபால் வீரமார்த்தாண்டன் வந்தனனே "

" பவளமொழிப் பேர்த்தையல்தன் வயின் வலிய

வீராந்தகன் சனித்தான் "

"களமணிப் பாவைநற்றவத்தால் வந்துதித்தனன்

வீரதீரன் பெயர் வலியோனே "

இவர்கள் நவவீரர்கள், தாரகனுடன் போர்புரியும் பொருட்டு முருகனுடன் கண வீரர்கள் பலர் சென்றனர். அவர்கள் அண்ட வாபரணன், சண்டன், காயெடு விழியன், சிங்கன் ஆகியோர்.

"நாயகன் அதற்பின அண்டவாபரணன்

நந்தியுக்கிரனொரு சண்டன், காயெதி விழிகன், சிங்கன் "

தாரகன் மனைவியின் பெயர் சவுரி என்பதாகும்

"அந்தமிலாக் கற்பிற் சவுரி அலக்கணுற்றாள்".

அமோகன் என்பவன் சூரனின் அமைச்சன்.

"அறிதரும் அமைச்சர் தம்முள் அமோகன்"

முருகனின் இயல்பைப் பற்றி அறிந்துவர சூரனால் அனுப்பப்பட்ட தூதர்களின் பெயர்கள் வருமாறு, பகன், மயூரன், சேனன், சக்கரவாகன், சுகன் ஆகியோர்.

"பகனொடு மயூரன் சேனன் பரிதயம்புள்ளின் பேரோன்

சுகனிவர் முதலாவுள்ள தூதரைத் தருதியென்ன"

என்பது பாடல்வரியாகும். பராசரமுனிவரது மக்களாகிய அறுவர் முருகக் கடவுள் முன்பு வந்து வணங்குவதாகக் கூறப்பட்டுள்ளது. அவர்கள் தத்தர், அனந்தர், நந்தி, சதுர்முகர், சுக்கிரபாணி, மாலி ஆகியோர்.

"தத்தனே அனந்தன் நந்தி சதுர்முகன் பரிதிப்பாணி
மெய்த்தவ மாலி என்ன மேவு மூவிருவர் தாமும்"

## 6. 2 அசுர காண்டத்தில் இடம் பெறும் பெயர்கள்

அவுணர்க்கரசன் அசுரேந்திரன், இவன் மனைவி மங்கலகேசி. இவர்களது மகள் சுரசை என்பவள். சுரசைக்கு மாயை என்ற பெயரும் உண்டு. இதனைக் கூறும் பாடல்,

"ஆறு கோடியதாகிய அவுணர்க்கரசன்
மாதில் மங்கலகேசியாம் அரக்கியை மணந்து
பேறதாகவே சுரசையென்றொரு மகட்பெற்றாள்"

மாயை காசிப முனிவரை நாடி வல்லமை பொருந்திய மக்களைப் பெறுதலைக் குறிப்பிடுகின்றார். அவர்களது மக்களின் பெயர்கள் வருமாறு,

சூரபன்மன் :"தத்தம் உள்ளமேல் நடுக்குற மாயவள் தன்பால்
வந்து தோன்றினன் சூரபன்மா எனும் வலியோன்"

சிங்கமுகாசுரன் :"அங்கை ஓரிரண்டாயிரம் ஆயிரம் முகமாச்
சிங்கமாமுகன் தோன்றினன் திடுக்கிடத் திசைகள்"

தாரகாசுரன் : " ஈரிரண்டு வாள் எயிற்றுடன் யானை மாமுகத்துத்
தாரகாசுரன் தோன்றினன் அவுணர்கள் தழைப்ப "

அசமுகி : " புணர்ந்த காலையில் அசமுகி தோன்றினள்"

இனி இச்சகோதரர்களின் மனைவிமார்களின் பெயர்களையும் குறிப்பிடுகின்றார்.

சூரபன்மனின் மனைவி பதுகோமளை என்பவள்,

"பதமகோமளை என்றோதும் பாவையைப் புகரோன் நாடிச்"

சிங்கமுகாசுரன் மனைவி விபுதை என்பவள்,

"திருமிகு விபுதை தன்னைச் சீர் மணஞ் செய்து நல்கி"

தாரகாசுரன் மனைவியின் பெயர் சவுரி,

"நிருதி தன் புதல்வியான நேரிழை சவுரி தன்னைக்
கரிமுக இளவல் சேரக் கடிமணம் புரிவித்திட்டான்"

சூரபன்மனின் மக்களின் பெயர்கள் வருமாறு,

பானுகோபன் :"புதல்வனுக்கோர் நன்னாளிடையளித்தனன்
பானுகோபன் என்னும் இயற்பெயர்"

அங்கி மாமுகன், இரணியன், வச்சிரவாகு,

"நிருதர் காவலன் அங்கிமாமுகத்தனை நிரஞ்சேர்
இரணியன்றனை வச்சிரவாகுவை எழிலார்!
மருவுலாங் குழற் பதுமகோமளைதர மகிழ்ந்தான் "

சிங்கமுகாசுரனின் மகன் அதிசூரன் என்பதாகும்.

"சீற்ற முற்றிடு சிங்கமுகன்கணே
தோற்றிலன் அதிசூரன் என்றோர் மகன்"

தாரகன் மகன் அசுரேந்திரன்,

"ஆமிவன் அசுரேந்திரன் என்றவற்
கேமமான குரவன் இசைப்ப"

சூரபன்மனின் மந்திரிகள் பெயர்கள் வருமாறு, துர்க்குணன், தருமகோபன், துன்முகன், சங்கபாலன், வக்கிரபாலன், தீயமகிடன் ஆகியோர்.

"துர்க்குணன் தருமகோபன் துன்முகன் சங்கபாலன்
வக்கிரபாலன் தீயமகிடனே முதலோர் தம்மைத்
தொக்க மந்திரிகளாகத் துணை கொண்டே சூரபன்மன் "

அசமுகி விருப்பம் கொண்ட முனிவர் துர்வாசர் ஆவார்.

"மூட்டினள் துருவாச முனியுறு தனியெல்லை"

அசமுகியின் மக்கள் வில்வலன், வாதாபி ஆகியோர்.

"தாயினதுவோயும் தந்தைதன் உருவாயும்
ஏயின இருமைந்தர் வில்வலன் வாதாபி"

காசிபர் தன் மக்களுக்கு அறிவுரை வழங்கும் போது பல கதைகளைக் கூறுவதாகக் காட்டப்பட்டுள்ளது. மார்க்கண்டேயர் கதையைக் கூறும்போது, மிருககண்டுயர், குச்சகமுனிவர், தருமதத்தன் போன்ற பல பெயர்களும் கவுச்சிகன், உசத்திபமுனிவர், விருத்தை, மருத்துவதி ஆகிய பெயர்களும் இடம் பெறுகின்றன. அசுரர்களது குரு

சுக்கிராச்சாரியர் எனப்படுகிறார். சுக்கிராச்சாரியர் சூரபன்மனுக்கு ஆயிரத்தெட்டு அண்டகோசங்களைப் பற்றிக் கூறுகையில் சக்கரவாளகிரியை ஆண்ட மன்னன் பிரியவிரதன் என்பதனையும், அவனுடைய ஏழுமக்களின் பெயர்களையும் தருகின்றார். அவர்களின் பெயர்கள் அங்குத்தீரன், மேதாதி, வபுட்டு, சோதிட்டு, துதிமான், அவ்விமன், சவளன் என்பனவாகும், அங்கித்திரனுடைய மக்களாகிய ஒன்பது பேர்களின் பெயர்கள் வருமாறு :பாரதன்,கிம்பரூடன், அரி, கேதுமாலன், பத்திராகவன், இளாவிருதன், இரமியன், இரணியன், குரு ஆகியோர். பாரதன் என்பவரின் மக்களாக இந்திரன், கசேருவன், தாமிரமன்னன், கபத்தி, நாகன், சவுமியன், கந்தருவன், வருணன் என்ற ஆண்மக்களும், குமரி என்ற ஒரு மகளையும் குறிப்பிடுகின்றார். இவையாவும் அசுரகாண்டத்தில் கூறப்பட்ட பெயர்களாகும்.

## 6. 3 மகேந்திர காண்டத்தில் இடம் பெறும் பெயர்கள்

வீரவாகுத்தேவர் கடல்கடந்து மகேந்திரபுரிக்குச் செல்லும்போது, வடபால் இருந்த இலங்கையை அடைந்தனர். அங்குக் காவல்புரியும் அவுணன் யாளிமுகன், அவன் மகன் அதிவீரன் ஆகியோராவர்.

"அன்னதோர் வேலை முன்னம் அகன்றலை யாளிப் பேரோன்
துன்னுபல் லனிகத் தோடுஞ் சூரனைக் காண்பான் ஏக
மின்னதி வீரன் என்னும் மதலையா யிரமாம் வெள்ளத்
தன்னொடும் இலங்கை வைகித் தணப்பறப் போற்றியுற்றான்"

அதிவீரனின் படைத்தலைவன் வீரசிங்கன் எனப்படுவான்.

"உற்றதோர் வீரசிங்கன் ஒண்சிறைச் சிம்புளே போல்"

வீரசிங்கனை வென்றபின் வீரவாகுத்தேவர், மகேந்திரபுரியை அடைய அங்கு வடக்குவாயிலில் அவுணவீரர்கள் காவல் புரிந்தனர். அவர்கள் கோரன், அதிகோரன் ஆகியோர்.

"வாரி வாய்தலுட் கோபுரநெற்றியின் மாடே
கோரனே யதிகோரனே எனப்படும் கொடிய
வீரர் தானை யோடிருந்தனர்"

கீழ்த்திசை வாயிலில் காவல்புரியும் வீரன் வீரபானு,

"மேதிக் கண்ணவான் வீரபானுவென்று"

தெற்கு வாயிலின் கண் காவல்புரியும் வீரன் கயாசுரன்,

"வன்றாள் கொண்ட மதக் கயாசுரன்"

அவுணப் படைத்தலைவர்களில் ஐவர் பெயர்கள் வருமாறு, சதமுகன், சண்டன், மாயன், அசமுகன், அனலி ஆகியோர் சிங்கன், நீலன் ஆகியோர் பூதப்படைத்தலைவர்களாவார். சதமுகன் என்பவன் அவுணவீரன்.

"நண்ணு சதமுகனை நோக்கி நவில்கின்றான் "

காலசித்து என்பவன் சூரனை நோக்கி "என்னை அனுப்பு. நான் அச்சிறுவனை வென்று வருகிறேன்" என்று சொன்னான்.

"கன்னிகா் மொய்ம்புடைக் காலசித்தெனுங்
கொன்ன வில் வேலினான் இனைய கூறுவான்"

## 6. 4 யுத்தகாண்டத்தில் இடம் பெறும் பெயா்கள்

சூரபன்மனுடன் போா்புரியச் சென்ற வீரா்களில், கடுஞ்சினத்தையுடையவா்களும், எல்லா உலகங்களையும் அழிக்க நினைத்தாலும் ஒரு நொடியில் அழிக்கக் கூடிய ஆற்றல் படைத்தவா்களும், தோள்வலி மிகுந்தவா்களும் ஆகிய படைத்தலைவா்கள் நூற்றெட்டுபோ் . அவா்களின் பெயா்கள் வருமாறு,

"சுப்பிரன் மேகமாலி சுவேத சீரிடன் கபாலி
அப்பிர சித்துச் சித்திராங்கனே சுவால தானு
ஒப்பில் வச்சிரனே வீமன் உக்கிரன் உக்கிரேசன்
பிப்பிலன் நந்திசேனன் பிரமசன் பிரமசேனன்."

"மதுமனே கராளன் தண்டன் பத்திரன் பரிநேமி
உதவகன் புட்பதந்தன் உருத்திராகாரன் வீரன்
மதிசயன் கேது மாலி வக்கிரன் பிரமகேசன்
அதிபதி கலிங்கன் கோரன் அச்சுதன் அசலன் சாந்தன்"

"சித்திரசேனன் பூரி சுசீலன் மாசயனே சிங்கன்
உத்தரமடங்கற் பேரோன் உபதிட்டன் சயனே ஈசன்
மத்தகன் மதங்கள் சண்டி மகாபலன் சுவேதன் நீல
பத்திரன் சுவாகு அண்டாபரணனே காகபாதன்."

"பிங்கலின் சமானன் மாயன் பிறங்கிய நிகம்பன் கும்பன்
சங்கிபாலன் விசாகன் சதநாவன் அயக்கிரீவன்

அங்கையாயிரத்தன் செங்கண் அயுத்தன்
அனந்தன் லாமன்
மங்கலகேசன் சோமன் வச்சிரமாலி சண்டன்."

"அசருகன் சரபன் குந்தன் ஆடகன் கவந்தன் மேகன்
விசயன் வித்துருமன் தண்டி வியாக்கிரன் காலபாசன்
தசமுகன் குமுதன் பான தனஞ் செயன் இடபருபன்
சுசிமுகன் அலைகேசன் சுபத்திரன் கேது மோகன்"

"மத்தனுன் மத்தன் நந்தி மனோபலன் வாயுவேகன்
பத்த நூறடிகள் பெற்றோன் பானுகம்பன் பதங்கன்
சுத்தனே அனிகன் சீதன் சுனாதனே சுமாலி மாவி
அத்திரி அவுணர் கூற்றன் அரிகேசன் சுவாலகேசன்".

(சுப்பிலன், மேகமாலி, சுலோமி, கபாலி, சத்திராங்கன், சுவாலதாலு, வச்சிரன், வீமன், உக்கிரன், உக்கிரேசன், பிப்பிலான், நாதிசேனன், பிரமசன், பிரமசேனன், மதமன், கராளன் தண்டன், பத்தறன், பரிகநேமி, உதவகன், தட்பநந்தன், உரத்திராகாரன், வீரன், மதிசயன், கேதுமாலி, வக்கீரன், பிரமகேசனன், அதிபதி, கலிங்கன், கோரன், அச்சதன், அசலன், சாந்தன், சித்திரசேனன், பூரிசிசிலன், மாசயன், சிங்கன், சப்ரதீமன், உபதிட்டன், சயன், சாரசன், மத்தான், மதங்கன், சண்டி, மகாபலன், சுவேதன், நீலன், பத்திரன், சுவாக, அண்டர் பாணன், கதகபாதன், பிங்கலன், சமானன், மாயன், நிகும்பன், கும்பன், சங்கபாலன், விசாகன், சதநாவன், அயக்கிரீவன், ஆயிரவாகு, செங்கண்ணன், அயுத்தன், அநந்தன், வாமன், மங்கலசேனன், சோமன், வச்சிரமாலி, சண்டன், அசமுகன்,

சரபன், குந்தன், ஆடகன், கபந்தன், மேகன், விஜயன், வித்துமேன, தண்டி, வியாக்கரன், காலபாசன், தசமுகன், குமுதன், தனஞ்செயன், இடபரூபன், சசிமுகன், அனவகேசன், சுபத்திரன், கேது, மோகன், மத்தன், உன்மத்தன், நந்தி, மனோபலன், வாயுலேகன், ஆயிரபாதன், பானுகம்பன், பதங்கள், சுத்தன், அனிதன், சீதன், சுனாதன், சுமாலி, மாலி, அத்திரி, அவுணர்கூற்றன், அரிபேசன், சுவாலகேசன்.)

சூரபன்மனின் படைவீரர்களில் சிலர்.

"விசையன் நேமியன் மிகுந்திறல் மாயன்
முசலி கண்டகன் முரன்கரன் மூர்க்கன்
தசமுகன் கனலி சண்டன் விசண்டன்
அசமுகன் மகிடன் அச்சிர வாகு."

"விசைய சேனன் விடசேனன் விமோகன்
வசைகொள் சோமான் மதுச்சசி சித்துக்
சுசிமுகன் அசனி சூனிய கேது
அசுர சேனன் இவர் ஆதியர் ஆனோர்."

விசையன், நேமியன், மாயன், முசலி, கண்டான், முரன், கரன், மூர்க்கன், தசமுகன், கனலி, சண்டன், விசண்டன், அசமுகன், மகிடன், அச்சிரவாகு, விசையசேனன், விடசேனன், விமோகன் சுசிமுகன், அசனி, சூனியகேது, அசுர சேனன், சோமன், மதுரசித்து ஆகியோர்) மகேந்திர புரியில் மேற்கு மகாபுர வாயிலைக் காவல் புரியும். அவுண வீரன் வியாக்கிரமுகன் அக்கினிமுகாசுரனுடன் சென்ற படைவீரர்களில் சிலர்,

"சோமகண்டகனே சோமன் சூரியன் பகைஞன் மேகன்
காமர் பிங்கலனே ஆதிக் கடிதெழுதானை வீரர் "

(சோமகண்டன், நேமன், சூரியகாதன், மேகன் ஆகியோர்) அவுணவீரர்கள் மூவாயிரம் பேருடன் போரிட்ட பூதப்படைத் தலைவர்களில் சிலர்.

"விசயன் சயன் கடபன் கரவீரன் அதிகோரன்
அசலன் அதிகுணன் வாமனன் அனந்தன் அகளங்கன்
வசையில் புகழ் அனகன் சதவலி மாருதன் வருணன்
சசிகண்டகன் முதலாயிரர் சமரின்றலை புகுந்தார் "

(விசயன், சயன், கடபன், கரன்,வீரன்,அதிகோரன்,
அசலன், அதிகுணன், சாமனன் அனர்தன் அகளங்கன்,
அனகன், மாருதன், வருணன், சசிகண்டன் ஆகியோர்)

## 6.5. தேவகாண்டத்தில் இடம் பெறும் பெயர்கள்

முருகப்பெருமான் தெய்வயானை திருமணச் செய்தி கேட்டு பலர் பயணப்பட்டனர். அவர்களுள் ஒருவர் முசுகுந்தச் சக்ரவர்த்தி. மனுச்சக்கரவர்த்திக்கும், மங்களவதிக்கும் பிறந்தவர். தன்தாயின் சகோதரன் அரிச்சந்திரனின் மகள் விசித்திரவதியை மணந்துகொணடவர்

## 6. 6. தக்க காண்டத்தில் இடம் பெறும் பெயர்கள்

பிரம்மாவின் பிள்ளைகளில் ஒருவன் தக்கன். சிவனை நோக்கி கடும்தவம் செய்து வரம் பெற்றவன். தக்கன் மனைவி வேதவல்லி.

தக்கனது இருபத்துமூன்று குமாரத்திகளை பிருகு, மரீசி, புலத்தியன், அங்கிராப்புலகன், வசிட்டன், அத்திரி முதலிய தவ *முனிவர்களுக்கு மணம் செய்து கொடுத்தான்.*

"இருபதின் மேலும் மூவர் ஏந்திழை மாரை நல்கிப்
பெருமை கொள் தக்கன் தன்மன் பிருகுவே மரீசி
யென்போன்
கருணைகொள் புலத்தியன் அங்கிராப்புலகன் வசிட்டன்
திரிவில் அத்திரி தீவேள்வி சீர்ப்பி தராவுக்கீந்தாள்."

தக்கனின் புதல்விகளின் பதிமூன்று பேரை தருமருக்கு மணம் செய்து கொடுத்தான்.

"துய்யதோர் சுபுத்திபுத்தி சுரசையே திருதி துட்டை
செய்யநடை கிரியை கீர்த்தி சிரத்தையோடிலச்சை மேதா
மைவிழிக் கத்தி சாந்தை வடிவைமுன் தருமன் வேட்டுப்
பொய்தவிர் இருபானேழு புதல்வரை அளித்தான் மன்னோ."

அவர்கள் பெயர்கள், சுபுத்தி, புத்தி, சரசை, திருதி, துட்டை, கிரியை, கீர்த்தி, சிரத்தை, இலச்சை, மேதா, கத்தி, சாந்தை, வபு என்பன ஆகும்.

"கேதமில் பிருகு என்பான் கியாதியைக் கொண்டு புல்லி
ஏதமில் விதாதாத் தாதா என்றிரு சிறாரை ஈன்று
சீதள வசைங் கொண்ட செந்திருவையுமுன் தந்து
மாதவன் தனக்கு நல்கி மாதவத்திருந்தான் மாதோ."

பிருகு, விதாதா, தாதா என்னும் இரு புதல்வர்களையும், இலக்குமியையும் பெற்றார். இலக்குமியை திருமாலுக்கு மணம் செய்து கொடுத்தார். மரீசி சம்பூதியை மணந்து நான்கு பெண்களைப் பெற்றார். புலத்தியர் நாரி சன்னதியை மணந்து பல பெண்களைப் பெற்றார்.

"தாரணி புகழ் மரீசி சம்பூதி தன்னை வேட்டாங்
கீரிடு பிணாக்கள் ஈந்தான் இவன்வழிப் பிறந்தார் பல்லோர்
போரியல் புலத்தை வென்ற புலத்தியமுனிவன் என்பான்
நாரிசன் னதியை வேட்டு நன்மகார் பலரைத் தந்தான்"

அங்கிரா மிருதியை மணந்து அங்கிதீரன், பரதன் என்ற இரண்டு புதல்வர்களைப் பெற்றார்.

"அங்கிரா மிருதி என்னும் ஆயிழை தனை மணந்து
பங்கமில் அங்கிதீரன் பரதனாம் மகாரைப் பெற்று
மங்கையர் நால்வர் தம்மை மகிழ்ந்துடன் அளித்தான் அன்னார்
தங்கடிப் பிறந்த மேலைத்தவத்தரும் அளப்பிலோரால் "

புலவர், பிருதியை மணந்து த்ததாத்திரி என்ற புதல்வரைப்பெற்றார்.

"பெருமை கொள் புலகன் என்போன் பிருதியைக் கொண்டு
தத்தாத்திரி தன்னை பயந்தான் அன்னோன் சீர்வழிக் கும்பன் யாந்தான்"

வசிட்டர் என்பர் ஊற்சயை மணந்து ஒரு புதல்வியையும் எழு புதல்வர்களையும் பெற்றார்.

"ஒருமைசேர் வசிட்டன் என்போன் ஊற்சயை மணஞ்
செய்தாங்கோர்
தெரிவையை நல்கி மைந்தர் எழுவரைச் சிறப்பில் தந்தான்"

அத்திரி என்பவர் அனசூயையை மணந்து சத்தி நேத்திரன், திங்கள், சனி, சங்கதானன் என்னும் புத்திரர்களைப் பெற்றார். அக்கினி சுவாவை மணந்து மக்கள் மூவரைப் பெற்றார்.

"அத்திரி என்னும் மேலோன் அனுசூயை தன்னை வேட்டுச்
சத்தி நேத்திரனே திங்கள் சனி சங்கதானன் என்னும்
புத்திரர் தம்மை ஈந்தான் பொங்கு தீச் சுவாலை வேட்டு
மெய்த்திறல் படைத்த மைந்தர் மூவரை விரைவோடீந்தான்"

கிரது என்பவர் கமைதனை மணந்து மூன்று மக்களைப் பெற்றார்.

" கவிபுகழ் கிரது வானோன் கமைதனை மணத்திற்கூடி
உவகையின் மூன்று பாலர் உதவினன்."

பிதரா என்பவர் சுவதையை மணந்து மேனை, தரணி என்ற இரு புதல்விகளைப் பெற்றார்.

"சுவதை என்றிசைக்க நின்ற துடியிடை தன்னை வேட்டுத்
தவலருஞ் சிறப்பின் மேனை தரணி மங்கையரைத்
தந்தான்"

மேனை என்ற பெண்ணை இமவான் மணந்து கொண்டார். தரணியை மேரு மணந்து கொண்டார்.

"அந்தநன் மேனை தன்னை ஆர்வமோ டிமவான் கொண்டான்
முந்நூறு தரணி தன்னை முறையினால் மேரு வேட்டு"

மேரு, வேலை என்பவளைத் தந்தார். வேலை என்பவளை கடலுக்கு நல்க, சரவணி என்ற பிள்ளையை அவர் தந்தார்.

"விண்ணுயர் மேருப்பின்னர் வேலையென்பவளை நல்கித்
தண்ணுறு கடற்கு நல்கச் சரவணி என்ன ஆங்கோர்
பெண்ணினை அனையன் பெற்றுப் பெரும்புகழ்ப் பிராசினப்பேர்
அண்ணலுக்குதவ அன்னான் ஐயிரு மகாரைத் தந்தான்"

தக்கன் நடத்தும் வேள்விக்கு வராத சில முனிவர்கள். அகஸ்தியர், சனகாதிமுனிவர். அத்திரி, வசிட்டர், பிருதி, ததீசி, துர்வாசர், பராசரர். ஆகியோர்,

"அகத்தியன் சனகன் முன்னோர் அத்திரி வசிட்டன் என்பான்
சகத்துயர் பிருகுக மேலாந் ததீசிவெஞ் சாபத்தீயோன்
பகைத்திடு புலத்தை வென்ற பராசரன் இனைய பாலார்
மகத்தினை இகழா ஈண்டு வருகிலார் போலும் என்றார்."

ஆடகக்கண்ணினன் என்பது இரணியாட்சனின் மற்றொரு பெயர்.

"விண்ணுளோர்க்கெலாம் அல்லலே வைகலும் விளைத்து
நண்ணும் ஆடகக் கண்ணினன்"

முயலகன் என்பது ஒரு பூதத்தின் பெயர். தாருகாவன வீரர்கள் சிவபெருமானுக்கு எதிராக வேள்விநடத்த அதிலிருந்து தோன்றிய ஒரு பூதத்தின் பெயர்.

"வினையது வினைவாற் பின்னும் வேள்வியை இயற்றல் உற்றார்
முனிவர் கணற்கணேயோர் முயலகன் எழுந்ததன்றே"

சுயாசுரன் என்பவன் நான்முகன் கொடுத்த வரத்தின் மேன்மையால், சிவபெருமானை எதிர்த்தவன். பின் அழிந்தவன். யானை உருவம் கொண்டவன்.

"துங்க மால்கரி யாக்கையின் உலமெலாந் தொலைக்கும்
வெங் கயாசரன் என்பவன்"

வயிரவக் கடவுள். இவர் சிவபெருமானை இகழ்ந்த நான்முகனின் உச்சந்தலையை ஒடுக்க சிவபெருமானால் படைக்கப்பட்டவர்.

"மிகப்பெருங் கருணைதன்னால் வேதநாயக னுள்ளத்து
மகிழ்வொடு புரிந்தான் என்ப வயிரவக்கடவுள் தன்னை."

சிவ பெருமான் கட்டளைப்படி வயிரவக்கடவுள் முனிவர்கள், தேவர்கள் இருக்குமிடம் சென்று குருதியை ஐயமாக ஏற்றனர். அவர்கள்,

"காலவேகன், கனன்முகன் சோமகன்
ஆலகாலன் அதிபலன் ஆதியாச்
சால நீடிய சாரதர் தானையை
நீலமேனி நிமலன் உதவினான்"

சலந்தரன் என்பவன் சிவபெருமான் இந்திரன் மேல் கொண்ட சினத்தை மேற்குக்கடலில் வீச அது ஒரு குழந்தையாயிற்று. அக்குழந்தை கடலரசனால் வளர்க்கப்பெற்று, பின் அவுணர் பக்கம் சேர்ந்தான்.

"பன்னுகென்ன நீ பரித்தலால் இவன்
தன்ன தொன்பெயர் சலந்தரன் என "

காலநேமி என்னும் அவுணன் மகள் விருந்தையைத் திருமணம் செய்து கொண்டான்.

"கால நேமியாம் அவுணன் கன்னிகை
வேலை நேர்விழி விருந்தை யென்பவள்"

பாற்கடலில் தோன்றி ஆலகால விடத்தினைக் கொண்டு வருமாறு தன் தொண்டரைப்பார்த்து சிவபெருமான் கூறுவது. அந்தத் தொண்டர் பெயர் சுந்தரர்,

"தொண்டு செய் தொழுகுகின்ற சுந்தரன் தன்னை நோக்கிக்
கொண்டிலன் வருதியால் அக்கொடுவிடந்தன்னை என்றான்."

சுக்கிராச்சாரியார் அறிவுரைப்படி அவுணமன்னன் ஒருவன் மரகத முனிவர் பால் வபுதை என்ற அவுணகுலப் பெண்ணை அனுப்புவது,

"அன்னவன் மரபில் வந்தோன் அறிஞர்க்கும் அறிஞன் மேவாய்
மன்னிய நெறிக்கண் நின்றோன் மாகதன் என்னும் பேரோன்"

"மீண்டுதன் னிருக்கைஎய்தி விபுதை யென்றொருத்தி அன்னாள்"

மாகத முனிவருக்கும் விபுதை என்ற அவுணப் பெண்ணுக்கும் பிறந்தவன் கயமுக அவுணர்.

"கயமுகத்தவுணன் ஆங்கே தநுமென உதயஞ் செய்தான்"

கயமுகன் அசுரேந்திரனுடைய மகள் விசிந்திரகாந்தியைத் திருமணம் புரிந்துகொண்டான்.

"வேந்தன் மாமகளான விசித்திர
காந்தி தன்னைக் கருது நன்னாளில்"

வீரபத்திரர், சிவபெருமானால் தக்கனது வேள்விச்சாலைக்குச் சென்று தமக்குரிய அவியை வாங்கி வருமாறு அனுப்பப்பட்டவர்.

"வந்து தோன்றியே முன்னுற நின்றனன் மாதோ
முந்து வீர பத்திரனெனுந் திறனுடை முதல்வன்"

பத்திரை வீரபத்திரர் துணைவி,

"துன்னுகின்றழிப் பத்திரை என்பதோர் துணைவி "

எச்சன் என்பவர் தக்கனது வேள்வித் தெய்வம் என்று கூறப்படுவர்

"இரிந்திடுகின்றதோர் எச்சன் என்பவன்"

வள்ளியம்மையின் தந்தை, வேட்டுவரசன் நம்பி எனப்படுகின்றான். இவை தக்ககாண்டத்தில் வருகின்ற பெயர்களாகும்.

## 6.7 முடிவுரை

இவ்வாறு கச்சியப்பர் தனது நூலில், எல்லா பாத்திரங்களுக்கும் பெயர்கள் கொடுத்துள்ளார். இதில் கூறப்பட்ட ஆண்பாற் பெயர்கள் நானூற்று இருபத்தாறு ஆகும். பெண்பாற் பெயர்கள் எண்பத்தாறு ஆகும். முனிவர்கள் பெயர்கள் முப்பத்தாறு ஆகும். பூதப்படையைச் சேர்ந்த வீரர்கள் நூற்றுமுப்பத்தெட்டு பேர்கள் ஆவர். அசுரப்படையைச் சேர்ந்தவர்கள் நூற்று எண்பத்தொன்று பேர்கள் ஆவர். இவ்வாறு ஆசிரியர் அனைவருக்கும் பெயர்கள் கொடுத்து நிகழ்ச்சிகளை உயிருள்ளதாக்கிக் காட்டியுள்ளளார்.